**யக்கலமுல்ல பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, யக்கலமுள்ள பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த ஆண்டுகளுக்குரிய பெறவேண்டிய ரூபா 8,493,508 இற்கான மூலதன உதவிகள் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்திருக்காமையால் ஆண்டிற்கான வருமானம் அப்பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கடந்த ஆண்டுகளின் போது மிகையாக கணக்கீடு செய்திருந்த ரூபா 86,981 தொகையான பெறவேண்டிய மூலதன உதவியை மீளாய்வாண்டின் போது சரி செய்யும் போது அபிவிருத்தி ஒதுக்கக் கணக்கு வரவு வைத்து, திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைத்திருந்தமையால் திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைத்ததன் காரணமான திரண்ட நிதியக் கணக்கு ரூபா 173,962 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளின் போது பெற்றிருந்த முற்பணங்களை கணக்கீடு செய்யும் போது ஏற்பட்டிருந்த பிழையை மீளாய்வாண்டின் போது சரிசெய்த போது ஆண்டிற்கான செலவு ரூபா 37,560 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பண்டக் கணிப்பீட்டு விதப்புரைகளின் பிரகாரம் ஏலவிற்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 625,000 தொகைக்கான கப் வண்டி மற்றும் ரூபா 400,000 தொகைக்கான டிரக்டர் என்பன ஏலவிற்பனவு செய்திருக்காத போதிலும் புத்தகங்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 62,103 ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான ரூபா 80,540 தொகையான களியாட்டவரி ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்கான பெறவேண்டிய ரூபா 64,013 இற்கான ஆதனக் கடன் தொகைக்கான அரசாங்க பங்களிப்பு, பெறவேண்டிய வருமான உதவி என கணக்கீடு செய்திருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 37,343,997 இனை 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, இணக்கமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 20,584,036 தொகையாகும்.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) உள்நாட்டு கடன்கள் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனிற்காக செலுத்த வேண்டியிருந்த கடன் தவணை மற்றும் வட்டியை செலுத்தி கணக்குகளை தீர்ப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு வருடத்திற்குமான கடன் தவணை ஏனைய கடன்கொடுத்தோருக்கு வட்டிச் செலவு கடன் கொடுத்தோருக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த மொத்தத் தொகை ரூபா 12,486,105 என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஊழியர்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,404,378 தொகை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 29,725 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி<br>விதி 193 | பாதீட்டுடன் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக்கான காரணத்தை காட்டக்கூடிய கூற்றொன்று திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரித்து கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 102 முதல் 110 வரை | காணாமல் போதல், சேதமடைதல் மீதான அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப் படாதிருந்ததுடன், நட்டங்கள், சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் | சபைக்குச் சொந்தமான 18 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 6,397,787 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,546,679 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபைக்குச் சொந்தமான 03 நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட சராசரி மாதாந்த மீதியின் கூட்டுத்தொகை ரூபா 4,754,888 தொகை காணப்பட்ட போதிலும், மிகை பணத்தை முதலீடு செய்யாமையால் சபைக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த வருமானத்தை இழந்துள்ளது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 38,040 | 40,676 | 26,218 | 199,570 | 38,000 | 40,506 | 70,838 | 185,112 |
| (ii) வாடகை | 361,800 | 3,752,040 | 3,750,540 | 17,500 | 3,648,000 | 3,568,863 | 3,569,113 | 23,000 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,095,000 | 521,864 | 554,314 | 74,950 | 1,075,000 | 433,210 | 562,460 | 107,400 |
| (iv) ஏனைய வருமானங்கள் | 68,297,300 | - | 38,278,121 | - | 45,588,600 | - | 36,551,514 | - |
| | 69,792,140 | 4,314,580 | 42,609,193 | 292,020 | 50,349,600 | 4,042,579 | 40,753,925 | 315,512 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 69,792,140 தொகையும், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 4,314,580 தொகையும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 42,609,193 தொகையும் காணப்பட்டதுடன். வருட இறுதியில் காணப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 292,020 ஆகும்.

### 2.3.3 வீதவரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) மற்றும் (2) இன் பிரகாரம் உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் முன்னேற்றப்பட்ட பகுதிகள் என வெளியிடப்பட்டிருந்த பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 2.3.4 ஏக்கர் வரி

பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 225,788 தொகை ஏக்கர் வரியில் மீளாய்வாண்டின் போது 89 சதவீதம் அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 199,570 ஆக இருந்தது,

### 2.3.5 வாடகை

மதிப்பீட்டுத் தொகையை விட ரூபா 3,390,240 தொகை மிகையாக சிட்டை இடப்பட்டிருந்ததுடன், நிலுவைத் தொகையில் மற்றும் சிட்டையிடப்பட்ட பெறுமதியில் சேகரித்தல் 99 சதவீதமாக காணப்பட்டது.

**2.3.6 அனுமதிப்பத்திர கட்டணம்**

மதிப்பீட்டுத் தொகையை விட ரூபா 573,136 குறைவாக சிட்டை இடப்பட்டிருந்ததுடன், சேகரித்தல் ரூபா 554,314 தொகையாக காணப்பட்டமையால் சேகரித்தல் 100 சதவீதமாகும்.

**2.3.7 வர்த்தக வரி கைத்தொழில் வரி**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 74,950 இற்கான வர்த்தக வரி மற்றும் கைத்தொழில் வரியினை அறவீடு செய்வதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.8 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 13,798,980 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,382,243 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைதத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து 2016 அக்தோபர் 16 ஆம் திகதி கிடைத்திருந்த ரூபா 1,000,000 தொகை அபிவிருத்தி வேலைகளை எதற்கும் பயன்படுத்தாமல் 2017 ஆகஸ்ட் 07 திகதி திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபையினால் வெலந்தாவ தோட்டத்தில் சேதனப்பசளை முற்றமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட உக்கிய குப்பைகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளை விற்பனையின் மூலம் ரூபா 133,137 தொகை உழைத்திருந்ததுடன், உக்காத குப்பைகளை, களஞ்சியத்தின் உட்பகுதியில் மற்றும் சேதன பசளை முற்றத்தின் ஒரு அறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இது குப்பை முகாமைத்துவம் தொடர்பாக நிரந்தர மற்றும் வெற்றிகரமான தீர்வு ஒன்றாக காணப்படாததுடன் உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்கு விற்பனை

செய்வதற்கு அல்லது பொருத்தமான வேறு ஏதும் செய்வதற்கு சபை இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குப்பை முகாமைத்துவம் வளவிற்கு வழங்கப்பட்டிருந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 2017 ஜனவரி 02 திகதி முடிவடைந்திருந்ததுடன், மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கிய அறிவுரையின் பிரகாரம் செயற்பட்டு 2017 ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரழ் தொடர்பாக அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகார பிரதேசத்தில் குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்கு மற்றும் விவசாய பண்ணை ஒன்று நடாத்துவற்காக 13 ஏக்கர், 22.83 பர்சஸ் அளவான வெலெந்தாவ வத்த என்ற காணியை அனுபவிக்கும் அடிப்படையில் பெற்றிருந்தது. இது தொடர்பாக பின்வரும் கருமங்கள் மேலும் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 ஆண்டின் போது 1/2 ஏக்கர் கருவா செய்கையை, விளைச்சலை வாடகைக்கு கொடுத்திருக்கவில்லை.

(ii) 1 ஏக்கர் வாழை செய்கை உரிய முறையில் பராமரிக்கப்படாமையால் வருமானம் குறைந்திருந்தது.

(iii) 4½ ஏக்கர் தென்னை பயிர்செய்கை அதனை பெற்றுக்கொள்ளும் போது காணப்பட்ட 57 தென்னை மரங்கள் தவிர புதிதாக மரங்கள் நடப்பட்டிருக்காததுடன் காணப்படும் மரங்களுக்கு உரம் இடப்பட்டு விளைச்சளை அதிகரித்திருக்கவில்லை.

(iv) துணைப்பயிர்கள் பயிர் செய்வதற்காக ஒதுக்கியுள்ள காணிப்பகுதி உரிய முறையில் பயிர் செய்து பராமரித்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய ஒரு கணக்கில் இருந்து வேறு கணக்கிற்கு மாற்றப்பட்ட பணத்தை தீர்க்கும் போது அதனை வருமானம் ஒன்றாக இனங்காணப்பட்டமையால் ஆக்கப்பட்ட ரூபா 679,696 தொகை மீதியொன்று மீளாய்வாண்டின் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 365,116 தொகையின் முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) இரண்டு ஊழியர்களின் ஆதனக் கடன் வட்டித் தொகை என மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 64,013 தொகையினை உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள, இறந்த, ஓய்வு பெற்றுள்ள 13 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 112,575 தொகை 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவீடு செய்வதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 400,000 பெறுமதியான குபோடர் மினி டிரக்டர் மற்றும் ரூபா 625,000 பெறுமதியான மிட்சுபிசி டபல் கப் வண்டி பயன்படுத்தாமல் காணப்பட்டது.

(ஆ) நன்கொடையாக கிடைத்திருந்த 02 தொலைக்காட்சி இயந்திரங்கள் செயற்படாமல் காணப்பட்டது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்நாட்டு கடன்கள் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தவணைகளை செலுத்தாமையால் ரூபா 693,022 மேலதிக தொகையொன்று வட்டியாக செலுத்த நேரிட்டிருந்தது.

(ஆ) சபையினால் 2006 ஜனவரி முதல் 2010 திசெம்பர் வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய தகவல்கள் மற்றும் பங்களிப்புத் தொகை செலுத்தாமையினால் ரூபா 141,719 தொகை மிகை விதிப்பு ஆக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.6 பெறுகை

#### 3.6.1 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

ரூபா 143,684 தொகைக்கான கொள்வனவுகள் பெறுகை செய்முறை கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 06 வருமான விடயங்களில் நெருங்கியிருந்த இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 27,188,374 தொகையாக இருந்ததுடன், அப்பெறுமதி 20 சதவீதம் முதல் 46 சதவீதம் வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 35,706,401 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 27 சதவீதம் முதல் 96 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(இ) வட்டி செலுத்துதல் பங்குலாபம் மற்றும் மிகையூதியக் கொடுப்பனவு மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்துள்ள ரூபா 9,951,303 தொகை செலுத்தியிருந்ததுடன், அது மதிப்பிட்ட பெறுமதியான 1,856 சதவீத பெறுமதியினை கொண்டிருந்தது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 ஜுன் 09 ஆம் திகதி DMA/2009(i), இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) மாற்றமின்றி முன் கொண்டு வரப்படும் கணக்கு மீதிகளை தீர்த்திருக்கவில்லை.<br>(ii) நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகள் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டன. |
| (ஆ) வாகனக் கட்டுப்பாடு | (i) வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யாமை.<br>(ii) செயற்படாத வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(iii) நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பிக்காமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) 06 வருமான விடயங்களின் இலக்காகிய வருமானத்தை உழைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | ஒரு செலவு விடயத்தில் மதிப்பீட்டு செலவினை மிகைத்து செலவீடுகள் மேற்கொண்டிருத்தல். |
| (ஈ) | பதிவேடுகள் பேணுதல் | (i) | சபையினால் வாகனப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கி பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (iv) | கணினிகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பதவியணி முகாமைத்துவம் | சபையில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |
| (ஊ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம அறவீடு செய்தவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தியிருக்கவில்லை. |
| | | (ii) | முத்திரைக் கட்டண வருமானம நாளதுவரையாக அறவீடு செய்திருக்கவில்லை. |
| | | (iii) | வீதவரி வலயங்கள் வெளியிடப்பட்டு, வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |